# ஆலய வழிபாட்டில் இசைவளங்களின் செல்நெறி

**கமலகாந்தன் வர்ஜிகன்**[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*ஆலய வழிபாட்டில் இசைவளங்களின் செல்நெறி எனும் தலைப்பிலமைந்த இந்த ஆய்வானது ஆலயத்தின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் இசை அம்சங்களை மூன்று விதமான தடங்களில் ஆராய்வதாக அமைகின்றது. அவையாவன பூசை மற்றும் திருவிழாக்களில் பாடப்படும் தேவாரப்பாடல்கள், வாத்தியஇசை, மங்கலவாத்தியங்கள் என்பனவாகும். இத்தகைய இசைக்கூறுகள் ஆலய வழிபாட்டு முறைகளில் பல வகைகளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆலயங்கள் உருவாக்கப்பட்டு கிரியை முறைகள் வகுக்கப்பட்ட போதே அவற்றில் பங்கு பெறுகின்ற இசை அம்சங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. நாளாந்தம் ஆலய பூசை நேரங்களில் பாடப்படும் தேவாரங்கள், ஆழ்வார் பாசுரங்கள், இசைக்கருவிகள் மற்றும் விசேட விழாக்கள், விரத காலங்களில் பாடப்படும் பாடல் வகைகளும், பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும், அவை தவிர மங்கலவாத்தியங்களும் பண்டைக்கால ஆலய வழிபாட்டு முறைகளோடு ஒட்டிக் காணப்பட்டன. ஆனால் தற்காலத்தில் நவீனமயமாக்கப்பட்ட ஆலய முறைமைகளும், நேரமுகாமைகள், பழமை பேணமுடியாத ஆலய நிர்வாகங்கள், இறையியல், இசையியல் மீதான மக்களின் நாட்டக்குறைவு, சினிமா நாடகங்கள் மீதான அதீத மோகம், திட்டமிட்ட கலாசார மற்றும் மத அழிப்பு, மதமாற்றம் என்பவை தற்காலத்தில், வழிபாடுகளில் இடம் பெறும் இசைக்கூறுகளின் ஆதிக்கத்தை படிப்படியாக அழிவடைந்து செல்ல வைக்கின்றன. இத்தகு நிலையிலிருந்து ஆலய வழிபாட்டில் இழக்கப்பட்டு கொண்டிருக்கும் இசை வளங்களை மீட்டெடுக்கும் வழிவகைகளை தேடுவதாக இந்த ஆய்வு அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** தேவாரப்பாடல்கள், இசைக்கருவிகள், ஆலயம், வழிபாடு

[1] *இசைத்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
vargize20@gmail.com

## அறிமுகம்

''ஆன்மாக்கள் இலயிக்கும் இடம் ஆலயம்'' என்று வழங்கப்படுகிறது. இப்பூவுலகில் தோன்றிய சகல உயிர்களும் தமக்குள் ஏதோ ஒரு நம்பிக்கையை இருத்தி வாழத்தலைப்படுகின்றன. அந்த நம்பிக்கையானது பலரால் பலவாறாக வகைப்படுத்தப்படு கின்றது. எமது சமயத்தைப்பொறுத்தவரை தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் யாவற்றையும் கடந்து நிற்கும் சக்தியையே கடவுள் என அழைக்கின்றோம். அது இயற்கையாக, ஆணாக, பெண்ணாக, அருவமாக, உருவமாக, அருவுருவமாக பல நிலைகளில் போற்றப்படுகின்றது. ஆரம்பகால மனிதன் இயற்கையை தன் காவலாகவும் தன் ஆதாரமாகவும் நம்பி அதனை தெய்வமாக வழிபட்டு வரலானான். பிற்காலத்தில் அவ்வழிபாட்டு முறையிலிருந்து சற்று மாறி உருவ வழிபாட்டை கடைப்பிடித்தான். அவ்வாறு உருவ வழிபாட்டினை நிகழ்த்த தலைப்பட்டவன் தான் உணர்ந்த சக்தியை பலவிதமான அலங்காரங்களுடனும் பொலிவுடனும் கூடிய தெய்வ உருவாக வடிவமைத்தான். அவற்றை வைத்து வழிபடவென ஆலயங்களை நிறுவினான். பின்பு தெய்வ உருக்களை வடிப்பதற்கான முறைகளையும், ஆலயங்கள் அமைப்பதற்கான முறைகளையும் ஒரு வரம்பினுள் அடக்கி அதனை சிற்பசாஸ்திரமாக மாற்றினான். இது தனக்குப் பின்னர் வரும் சந்ததி இதனை சரியாகப் பின்பற்றவேண்டும் என்ற நம்பிக்கையால் உருவானது. இவ்வாறாக, தான் அமைத்த ஆலயங்களில் உள்ள இறைவனை வழிபடவென பூசை முறைகளையும் அப்பூசைமுறைகளில் பயன்படுத்த வேண்டிய இசை வளங்களையும் தோற்றுவித்தான். சிவன் கையில் உடுக்கையும், சரஸ்வதி கையில் வீணையும், கண்ணன் கையில் குழலும். நந்தி கையில் மத்தளமும், நாரதர் கையில் தம்புராவும் இருப்பது போல இறைவடிவங்களை உருவாக்கி இறைவனும் இசையும் வேறல்ல இறையே இசை இசையே இறை எனும் தன்மையில் இறைவனை வழிபடும் போது இசையாலே இறைவனை அர்ச்சித்து வழிபடலானான். பன்னெடுங்காலமாக இறைவழிபாட்டில் இசையோடு கலந்து வந்த மனிதன் தன் பரிணாம வளர்ச்சியில் இறைவழிபாடுகளில் மேலும் தேவையான இசைவளங்களை உட்புகுத்தி வழிபாட்டை மேன்மை செய்து வரலானான். இவ்வாறு போற்றி வழிபாடு செய்யப்பட்ட ஆலய இசைவளங்கள் தற்காலத்தில் எத்தகைய நிலையில் காணப்படுகின்றன என்பதை ஒப்பீடு செய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம்

ஆலய வழிபாட்டில் இசைவளங்களின் செல்நெறி எனும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வானது முன்னைய கால ஆலய வழிபாடுகளில் இசை சம்பந்தமான அம்சங்களையும் தற்போது ஆலய வழிபாடுகளில் காணப்படுகின்ற இசை சம்பந்தமான அம்சங்களையும் ஆராய்வதன் மூலம் மருவி வருகின்ற இசைசார் அம்சங்களை நினைவூட்டுவதாகவும் இழந்து கொண்டிருப்பவற்றை மீட்டெடுக்க கூடிய வழிமுறைகளை விளக்குவதையும் நோக்கமாகக் கொண்டு அமைந்திருக்கும்.

**ஆய்வின் மூலங்கள்**

இந்த ஆய்வானது ஆலயம், அது சார்ந்த இசை அம்சங்களை வெளிக்கொணருமாகையால் துறைசார் நூல்களும் ஆலயங்களில் நேரடியாக கிடைக்கப்பெற்ற அனுபவங்களும் ஆய்வுக்கான மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது ஆலயத்தின் பண்டைய, தற்போதைய இசைவளங்களை ஒப்பீடு செய்வதால் பிரதானமான ஆய்வுமுறையாக ஒப்பீட்டு ஆய்வு அமைகிறது.

**ஆய்வின் கருதுகோள்**

ஆலயத்தின் பண்டைய, தற்போதைய இசைவளங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் தற்போது நாம் இழந்து விட்ட வளங்களை அறியவும் இருப்பனவற்றை காத்துக்கொள்ளவும் முடியும் என்ற கருதுகோளினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வுப்பிரச்சினை**

எம்முன்னோர்களால் வழங்கப்பட்ட ஆலயம்சார் இசைவளங்கள் காலஓட்டத்தினால் சிறிது சிறிதாக மருவி நமக்குச் சொற்பமே எஞ்சியுள்ளன. அதற்கான காரணத்தை அறிதலே ஆய்வுப்பிரச்சினையாகும்.

**ஆலயமும் இசையும்**

பல்லாயிரம் ஆண்டுகளாகவே சமயத்தின்பால் தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையையும் போற்றுமையையும் இன்றளவில் நாம் காணும் பண்டைக்கால ஆலயங்கள் பறைசாற்றி நிற்கின்றன. ஆலயங்கள் வெறுமனே இறைவன் வாசம் செய்யும் தலமாக அல்லாமல் வேதியர்களுக்கு வேதசாலையாகவும், அறிஞர்கள் கவிஞர்களுக்கு கவிசாலையாகவும், சிற்பிகட்கு சிற்பகூடமாகவும், ஓவியனுக்கு ஓவியக்கலைக்கூடமாகவும், இசை நாட்டிய விற்பன்னர்களுக்கு ஆற்றுகைப்படுத்தும் இடமாகவும் விவாதம் செய்யும் இடமாகவும் மிளிர்ந்திருக்கின்றன. இவற்றுக்கு சான்றாக ஆலயங்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள், ஆலயங்களில் உள்ள இறைவன் இறைவிமீது பாடப்பட்ட பாடல்கள், ஆலய உள்வீதி வெளிவீதி பிரகாரங்களில் காணப்படும் ஆற்றுகை தளங்கள் திகழ்கின்றன. இதனாலேயே பண்டைய மக்களின் வாழ்விடங்கள் யாவும் ஆலயத்தை அண்டி காணப்பட்டன. இன்று காணப்படும் பெரிய நகரங்கள் யாவும் ஏதேனும் ஒரு ஆலயத்தை சார்ந்து காணப்படுவது மேற்சொன்ன கருத்தை வலுச்சேர்ப்பதாக அமைந்திருக்கிறது. அந்தவகையில் இந்த ஆய்வானது ஆலய இசை வளங்களை மூன்று வகையான தளங்களில் ஆராய்கின்றது.

அவையாவன

1. பூசை மற்றும் திருவிழாக்களில் பாடப்படும் தேவாரப்பாடல்கள், பண்கள்
2. பூசை மற்றும் திருவிழாக்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்
3. பூசை மற்றும் திருவிழாக்களில் மங்கள வாத்தியம்

## பூசை மற்றும் திருவிழாக்களில் பாடப்படும் தேவாரப்பாடல்கள், பண்கள்

ஆலயத்தில் நித்திய பூசைகளில் மற்றும் திருவிழாக்காலங்களில் திருமுறைகள் இசைக்கப்படுவது வழக்கம். இதனை "திருப்பதிய விண்ணப்பம்" என அழைப்பார்கள் தொன்மையான எமது இசையில் பலவகைப் பண்கள் காணப்படுகின்றன. இப்பண் அமைப்பில் அமைந்த பாடல்களாக பன்னிரு திருமுறைகள் இனம் காணப்படுகின்றன. பன்னிரு திருமுறைப் பாடல்களுக்கு ஆலயத்தில் இடம்பெறும் பள்ளியெழுச்சிப் பூசையிலிருந்து பள்ளியறைப் பூசைவரை தனியிடம் வழங்கப்படுகிறது. அதிகாலை பூசையில் மணிவாசகரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களும், பூசைநேரங்களில் பஞ்சபுராண ஓதுகையும் இடம்பெற்றிருப்பதை ஆலயங்களில் காணப்படும் கல்வெட்டுக்களிலும் நூல்களிலும் காணமுடிகின்றது. ஆலயங்களில் நடைபெறும் பூசைகளில் பாடப்படும் பதிகங்கள் பகற்பண், இராப்பண், பொதுப்பண் ஆகிய பண் அமைப்புக்களுக்கு உட்பட்டே பாடப்பட்டு வந்துள்ளன. இவை தவிர மாதங்களுக்கான பண்களும் (அட்டவணை – 01)

| மாதங்கள் | பண் |
|---|---|
| மார்கழி | காந்தாரம் |
| தை | மேகராககுறிஞ்சி |
| மாசி | தக்கராகம் |
| பங்குனி | கௌசிகம் |
| சித்திரை | கொல்லி |
| வைகாசி | சீகாமரம் |
| ஆனி | வியாழச்சிரேணி |
| ஆடி | சட்பதம் |
| ஆவணி | தக்கேசி |
| புரட்டாதி | ராட்டிரபாஷை |
| ஐப்பசி | தாண்டவம் |
| கார்த்திகை | கௌஞ்சிகம் |

ஆகமங்களில் காணக்கிடைக்கின்றன. இவற்றில் சில பண்களை இனங்காண முடியவில்லை. இவற்றைப்போல திருவிழாக்காலங்களில் ஒன்பது திசைகளிலும் இசைக்கப்படவேண்டிய பண்முறைகளாக

(அட்டவணை – 02)

| | |
|---|---|
| நவசந்தி | பண் |
| பிரமசந்தி | பஞ்சமம் |
| இந்திரசந்தி | காந்தாரம் |
| அக்கினிசந்தி | கொல்லி |
| எமசந்றி | கௌசிகம் |
| நிருதிசந்தி | நட்டபாடை |
| வருணசந்தி | சீகாமரம் |
| வாயுசந்தி | தக்கேசி |
| குபேரசந்தி | தக்கராகம் |
| ஈசானசந்தி | சாளரபாணி |

இவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன.

ஆலயங்களில் பதினாறு வகையான உபசாரங்கள் (சோடச உபசாரம்) முடிவடைந்தபின் பஞ்சபுராணம் பாடும் வழக்கம் வழக்கத்திலிருந்தது. இதற்கெனப் பயிற்சி பெற்ற ஓதுவார்மூர்த்திகள் நியமிக்கப்பட்டிருந்தனர். சோழர் காலத்தில் ஆலயத்தில் திருமுறைகள் விண்ணப்பிப்பவரை நியமித்த செய்தியினைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தஞ்சாவூர் பெரியகோயிலில் கருவூராரின் திருவிசைப்பாப் பாடல்களுக்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருந்ததையும் அறியமுடிகின்றது.

இவைதவிர தோத்திரப்பாடல்களையும், இறைவன் புகழையும் கூட்டிசையாகப் ''பஜனை'' பாடும் முறைமை காணப்பட்டது. இக்கூட்டிசை வழிபாடானது திருக்கோயில்களில் வாரம் ஒருமுறையோ அல்லது திருவிழாக்காலங்களிலோ ஆலயத்தின் பிராகாரங்களில் இறைவன் எழுந்தருளும் போது சுவாமியின் பின்னால் பாடிக்கொண்டு வருவதாக அமைந்திருந்தது. இக்கூட்டிசை வழிபாட்டில் வயது வித்தியாசமோ பால் வேறுபாடுகளோ காணப்படுவதில்லை. இவர்களே மார்கழி மாதங்களில் ஆலய வீதிகளில், மாடவீதிகளில் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை பாடிவருவதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

தற்காலத்தில் ஆலயங்களில் பாடப்படும் தேவாரங்களின் பண்கள் பற்றி நோக்கினால் ஆலய விழாக்காலங்களில் நவசந்திகளில் பாடப்படும் பண்முறைகளும் பதிகங்களும் பெரும்பாலும் எல்லா ஆலயங்களிலுமே பின்பற்றப்பட்டு வருகின்றன. ஒருசில ஆலயங்களில் எல்லாப் பதிகங்களும் ஒரேபண்ணில் பாடப்படும் துயரங்களும் நடைபெறுகின்றன. தற்போது ஆலயங்களில் அதிகாலைப்பூசைகள் இறுவெட்டுக்களில் ஒலிக்கும் பக்திப்பாடல்களோடே ஆரம்பமாகின்றன. அத்தோடு ஆலயங்கள் தோறும் தினசரிப் பூசைகளில் பஞ்சபுராணம் பாடப்படும் முறைகள் காணப்பட்டாலும் அவற்றை முறையாக ஓதுவதற்கான வளப்பற்றாக்குறை

காணப்படுகிறது. தற்போதைய சந்ததியினரின் திருமுறை மீதான நாட்டக்குறைவு, போதியளவான திருமுறைகள் மனனம் செய்யாமை, ஆலயத்தில் திருமுறைபாடுவதை வெட்கத்துக்குரியதாகவும் நாகரிகம் இல்லை எனவும் நினைக்கும் தன்மை ஆகியவற்றைக் காரணங்களாக கூறலாம். சில ஆலயங்களில் தேவாரம், புராணம் பாடுவதற்குக் கூட பக்தர்கள் இன்மையால் சிவாசாரியார்களே திருமுறையையும் பாடும் நிலை காணப்படுகிறது. அதுமட்டுமல்லாது தற்போதைய காலகட்டத்தில் ஆலயத்தில் மூன்றுவேளைப் பூசைகள் மிகவும் சிரமப்பட்டே நடைபெறுகின்றன. ஊர்கூடி மகிழவே ஆலயத்திருவிழாக்கள் இடம்பெறுகின்றன. ஆலயம் வரமுடியாத பக்தர்களைக் காணவே இறைவனின் வெளிவீதி புறப்பாடுகள் அமையும். ஆனால் தற்காலத்தில் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையும் குறைந்து இறைவனைச் சுமக்கவும் அவன் பின்னால் பஜனைகள் பாடவும் ஆட்கள் இல்லாமல் போயினர். இளையவரும் சிறுவர்களும் ஆலயத்தின் மீதும் இறைவன் மீதும் கொண்ட பக்திநெறி குறைவடைந்து விட்டது. இதனால் இறைவனை பண்ணோடு பாடிப்பரவும் தன்மையும் அழிவு நிலையை நோக்கிச் செல்கிறது.

**பூசை மற்றும் திருவிழாக்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்.**

ஆலய வழிபாடுகளில் இடம்பெறும் தேவார, பண் இசைப்பு முறைகளைத் தொடர்ந்து ஆலயத்தில் பூசை, திருவிழாக்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்பற்றி இப்பகுதியில் காணலாம். இசைக்கருவிகளை தோல், துளை, நரம்பு, கஞ்சம் ஆகிய பிரிவுகளுக்குள் அடக்கலாம். காரைக்காலம்மையார் 11ஆம் திருமுறையில்

> ''துத்தங் கைக்கிளை விளரிதாரம் உழைஇளி ஓசைபண்
> கெழுமப்பாடிச் சச்சரி கொக்கரை தக்கையோடு
> தகுணிதம் துந்துபி தாளம் வீணை மத்தளங் கரடிகை
> வன்கைமென்றோல் தமருகங் குடமுழா மொந்தை வாசித்தத்தனை
> விரவினோடாடும் எங்கள் அப்பன் இடந்திரு ஆலங்காடே''

எனத் திருவாலங்காட்டு இறைவனுக்கு உபசாரமாக்கப்படும் இசைக்கருவிகள் பற்றிக் குறிப்பிடுகிறார். இதுமட்டுமல்லாது சைவத்திருமுறைப்பாடல்களில் 72 வகையான இசைக்கருவி கள் குறிப்பிடப்படுகின்றன.

தோற்கருவி வகைகளில்

- சிறுபறை, பெருமுரசு, திமிலை, தண்ணுமை, முழவு, உறுமி, பறை, தம்பட்டம்
- சிறுமுரசு - சாயரட்சை மேளம் எனும் பெயருமுண்டு. (சாயரட்சை பூசைகளில் மட்டுமே இக்கருவி வாசிக்கப்படுவதால் இப்பெயர் பெற்றது.)
- பேரிகை - இறைவனின் வருகையை கூறும் வாத்தியம்.
- இடக்கை - ஆலயத்தில் மூலஸ்தான பூசையில் மட்டுமே பயன்படுத்தப்படும் வாத்தியம்.
- உடுக்கை - சிவன், அம்மன் ஆலயங்களில் பயன்படும் வாத்தியம்

- மத்தளம் - சிதம்பரத்தில் பூசைநேரங்களிலும் விழாக்காலங்களிலும் சிறப்புப்பெறும் வாத்தியம்
- கரடிகை - சிவாலயங்களில் மட்டுமே வாசிக்கப்படும் வாத்தியம்
- நகரா - ஆலயங்களில் அபிடேக ஆராதனைகளில் ஊர்வலங்களில் பயன்படும் வாத்தியம்
- பஞ்சமுகவாத்தியம் - நித்தியபூசை மற்றும் அபிடேகக் காலத்தில் வாசிக்கப்படும் வாத்தியம்

துளைக்கருவி வகைகளில்

- புல்லாங்குழல் - திருப்பதிகங்கள் இசைக்கும்போது பயன்படும் வாத்தியம்
- முகவீணை - தேருக்கு சுவாமி எழுந்தருளும் போது
- சங்கு - பொதுவாக எல்லா ஆலயங்களிலும் பூசைநேரங்களில்
- கொம்பு - சுவாமி புறப்பாட்டின் போது
- எக்காளம் - சுவாமி புறப்பாட்டின் போது
- கொக்கரை, மகுடி, திருச்சின்னம், தூம்பு

நரம்புக்கருவி வகைகளில்

- யாழ் - திருப்பதிகங்கள் இசைக்கும் போது
- வீணை - இறைவன் இறைவியின் ஏகாந்த சேவையின் போது
- சாரங்கி - திருப்பதிகங்கள் இசைக்கும் போது
- பிடில் - திருப்பதிகங்கள் இசைக்கும் போது

நரம்புக்கருவி வகைகளில்

- கைமணி, சேமக்கலம், சிறுதாளம், பெருந்தாளம்

இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவைமட்டுமன்றி விழாக்காலங்களில் நவசந்திகளில் வாசிக்கப்படும் வாத்தியக்கருவிகளாக லயவாத்தியம். கொங்கணாந்த வாத்தியம், லலிதவாத்தியம், விதானந்த வாத்தியம், மங்களநாதம், பஞ்சம வாத்தியம், அனுகும்பவாத்தியம் ஆகியன திகழ்கின்றன. இலங்கையில் மிருக யாத்திரை எனப்படும் வேட்டைத்திருவிழாவில் முரசு, பறை என்பனவும் தேர் உலா வரும்போது தோற்கருவிகள் சிலவற்றை ஒன்றாகச் சேர்த்து கூட்டாக வாசிக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளன. இவற்றை வாசிக்கவென கைதேர்ந்த கலைஞர்கள் காணப்பட்டார்கள்.

தற்காலத்தில் ஆலயங்களில் நடைபெறும் பூசை, திருவிழாக்களில் மேற்குறிப்பிட்ட இசைக்கருவிகளில் எத்தனை பயன்பாட்டில் உள்ளன? எவ்விசைக்கருவிகள் எச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படுகின்றன? என்பவற்றை நோக்கினால் பெரும்பாலும் சிவாலயங்களில் மேற்குறிப்பிட்ட இசைக்கருவிகளில் அனேகமானவை வாசிக்கப்படுகின்றன. ஆனால் நம் முன்னோர்கள் வகுத்துவைத்த வாசிப்பு முறைகளுக்கும் தற்போதைய வாசிப்பு முறைகளுக்கும் அனேக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. பண்டைய ஆலயங்களில் பல்வேறு வாத்தியக்கருவிகள் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்ற போதும் அதே ஆலயங்களில் மேற்படி இசைக்கருவிகளை அமைப்பு அளவில் கூட காணமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. பல இசைக்கருவிகள் வழக்கொழிந்து போய்விட்டன. இருக்கக்கூடிய கருவிகளை இசைப்பதற்கான முறைமை தெரியாமை, இசைக்கருவிகளை உருவாக்கவும் கையாளவும் தெரியாமை, அக்கருவிகள் பற்றிய தெளிவின்மை போன்றவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடலாம். ஆனாலும் முற்றாக அழிந்துவிடாத நிலையில் பல ஆலயங்களில் ஒருசில கருவிகள் வாசிக்கும் முறை தெரியாமல் ஒலிக்காக மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

## பூசை மற்றும் திருவிழாக்களில் மங்களவாத்தியம்

திருக்கோயில் வழிபாட்டுமரபில் முக்கியம் வகிப்பது மங்களவாத்தியம் என்றழைக்கப்படும் தவில், நாதஸ்வர வாத்தியங்களாகும். இக்கருவிகள் தொன்மையான காலந்தொட்டே வெவ்வேறு பெயர்களுடன் வளர்ந்து வந்திருக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. ஆலயத்தில் புலர்காலத்துப் பூசைமுதல் பள்ளியறைப் பூசைவரை மங்கலவாத்தியத்திற்கான வாசிப்புமரபுகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆலயத்தில் நாதஸ்வரத்தில் வாசிக்கப்படும் இராகங்கள் பொழுது வாரியாக வரையறுக்கப்பட்டுள்ளன.

(அட்டவணை – 03)

| பூசைக்காலங்கள் | இராகங்கள் |
|---|---|
| அதிகாலை | பூபாளம், பௌளி, வலசி |
| காலைசந்தி | பிலஹரி, கேதாரம், கௌளிபந்து |
| உச்சிக்காலம் | சுத்தபங்காள, பூர்ணசந்திரிகா |
| சாயரட்சை | வசந்தா, சரஸ்வதி, பூர்விகல்யாணி |
| இரவு | காம்போதி, சண்முகப்பிரியா, தோடி |
| அர்த்தஜாமம் | நீலாம்பரி, ரீதிகௌளை, ஆனந்தவைரவி |

நாதஸ்வரத்தில் இவ்வாறான வரைமுறைகள் இருக்க தவில் வாத்தியத்தில் நிவேதனம், அபிசேகம், ஆராதனை, புறப்பாடு ஆகியவற்றிற்குத் தனித்தனியாக வாசிப்புமுறைகள் காணப்படுகின்றன. தளிகைமல்லாரி, தீர்த்தமல்லாரி, தேர்மல்லாரி, புறப்பாட்டுமல்லாரி, திரிபுடதாளமல்லாரி, கணபதிதாளம், மயூரதாளம், பேரிதாடனம் போன்ற வாசிப்புமுறைகள்

பின்பற்றப்படுகின்றன. சுவாமி புறப்பாட்டில் மல்லாரியை அடுத்து இராக ஆலாபனையைத் தொடர்ந்து ரக்தி இடம்பெறும். சுவாமி தெற்குக் கோபுரவாசலை அடைந்தபின் பல்லவி வாசிக்கப்படும். கிழக்குவீதி நடுப்பகுதி வரை பல்லவிக்கான சுரங்களும் இராகமாலிகை சுரங்களும் வாசிக்கப்படும். கீழைக்கோபுர வாசலையடைந்ததும் தேவாரப்பாடல்கள், பதங்கள் என்பன வாசிக்கப்படும். சுவாமி கோயிலைவிட்டு புறப்பட்டுவிட்டால் மீண்டும் உள்வரும்வரை வேறு எப்பாடல்களும் வாசிக்கக்கூடாதென்பது பழமையான மரபாக இருந்துவந்துள்ளது. இதனால்தான் ஆலயங்களிலிருந்து பேர் சொல்லும் விதமான தவில் நாதஸ்வரக்கலைஞர்கள் வெளிப்பட்டார்கள். கீழை வாசல் சந்நிதியை அடைந்ததும் தட்டிசுற்று எனும் வாசிப்பு இடம்பெறும். பள்ளியறைப்பூசையில் சின்னமல்லாரி, லாலி, பதம் என்பன இசைக்கப்படும். தெப்பத்திருவிழாக் காலப்பகுதியில் ஓடப்பாட்டும் சிவன் ஆலயங்களில் 8ஆம் திருவிழாவான பிச்சாடனர் விழாவின் போது ‘‘ஒடக்கூறு’’ எனும் இசை வாசிக்கப்படுகின்றது. திருவிழாக்காலங்களில் நவசந்திகளில் (அட்டவணை – 04)

| நவசந்தி | இராகங்கள் |
|---|---|
| பிரம்மசந்தி | மத்தியமாவதி |
| வருணசந்தி | நாதநாமக்கிரியா |
| வாயுசந்தி | இராமக்கிரியா |
| குபேரசந்தி | மாளவகிரி |
| ஈசானசந்நி | சங்கராபரணம் |
| இந்திரசந்தி | வேளாவளி |
| அக்கினிசந்தி | வராளி |
| எமசந்தி | குர்ஜரி |
| நிருதிசந்தி | பைரவி |

போன்ற இராகங்கள் வாசிக்கப்படுகின்றன. இவ்வாறாக ஆலயத்தில் பாடப்படும், வாசிக்கப்படும் இசைவளங்களுக்கான பத்ததி முறைகள் வரையறுக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டுவந்தன.

மேலே கூறப்பட்ட மங்கல வாத்தியங்களுக்கான வரன்முறையானது திருமுறை, பண், இசைக்கருவிகளைப் போலல்லாது ஆரம்பத்தில் உள்ளது போன்றே தற்சமயம் வரை பேணப்பட்டு வந்தாலும் அவற்றிலும் சிலமாறுதல்களும் காலத்தின் தாக்கங்களும் இடம்பிடித்திருக்கின்றன. மங்கலவாத்தியக் கலையானது பரம்பரை பரம்பரையாக ஒரு குழுவினரால் மட்டுமே பேணப்பட்டு வந்துள்ளது. இக்கலையானது தம்மிடமிருந்து வேறு எங்கும் சென்று விடக்கூடாதென்பதில் அவர்களது இசை போதனை வழக்கத்திலிருந்தது. ஆலயங்களை பொறுத்தளவில் தற்போது மங்கல வாத்தியத்தின் பயன்பாடு அதிகமாகவே இருந்தாலும் முன்னைய வரன்முறை தற்போது பின்பற்றப்படாமையினைக் காணமுடிகிறது. ஆலயத்தினை நிர்வாகம் செய்பவர்களே இதற்குச் சரிபாதி பொறுப்பேற்க வேண்டும். ஆலயங்களில் செண்டைமேளத்தின் பயன்பாடு, மேலைத்தேய வாத்தியங்களின் பயன்பாடு,

இலத்திரனியல் இசைக்கருவி, கலைஞர்களை மதிக்காத தன்மை, கலைக்கேற்ற தட்சணை தரமறுத்தல் போன்றன முறையான மங்கல வாத்தியப் பயன்பாடு வீழ்ச்சிபெற காரணமாகின. அதுமட்டுமல்லாது நாதஸ்வரத்தையோ தவிலையோ முழுமையாகக் கற்றுமுடிக்காமல் ஆற்றுகை செய்வதும் ஆலயகிரியைகளுக்கு செல்வதும் இப்பின்னடைவிற்கான காரணமாக கொள்ளமுடியும். திருவிழாக்களில் நவசந்தியில் வாசிக்கப்படும் இராகங்களின் சொரூபத்தினை முழுமையாக ரசிப்பதே பெரும்பாலான ஆலயங்களில் எட்டாக்கனியாக உள்ளது. ஆலயத்தில் சுவாமி புறப்பாட்டின் போது வாசிக்கப்படும் மல்லாரி இசையே சுவாமியின் புறப்பாடு பற்றி மக்கள் அறியக் காரணமானது. சில ஆலயங்களில் பக்தி பாடலுடன் புறப்பாடு ஆரம்பித்து முடிவடையும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவை தவிர சினிமாப் பாடல்கள் மீதான மோகம் ஆலயத்தினையும் விடாமல் ஆக்கிரமித்துச் சுவாமியின் வெளிவீதிப் புறப்பாடுகளில் சினிமா பாடல்கள் வாசிக்கப்படுவதும், திருமண சடங்கில் மரபுசார் வாசிப்புமுறைகளை மாற்றி அதற்கொப்பான சினிமாப்பாடல்களை வாசிப்பதும் மங்கல வாத்திய இசைக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழுக்காகும். இதனை ஆலய அறங்காவலர் சபையும் மங்கல வாத்தியத்தை பயிற்றுவிக்கும் குருமாருடைய கண்டிப்பும், பக்தர்களின் சரியான நெறிப்படுத்தலும் இருந்தால் மட்டுமே மீட்டெடுக்கமுடியும்

**முடிவுரை**

இந்த ஆய்வானது ஆலயத்தின் வழிபாட்டு முறைகளில் காணப்படும் இசை அம்சங்களை மூன்று விதமான தடங்களில் ஆராய்வதாக அமைகின்றது. அவையாவன பூசை மற்றும் திருவிழாக்களில் பாடப்படும் தேவாரப்பாடல்கள், பூசைக்கால, விழாக்கால வாத்தியஇசை, மங்கல வாத்தியங்கள் என்பனவாகும். இத்தகைய இசைக்கூறுகள் ஆலய வழிபாட்டு முறைகளில் பல வகைகளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆலயங்கள் உருவாக்கப்பட்டு கிரியை முறைகள் வகுக்கப்பட்ட போதே அவற்றில் பங்கு பெறுகின்ற இசை அம்சங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. நாளாந்தம் ஆலய பூசை நேரங்களில் பாடப்படும் தேவாரங்கள், ஆழ்வார் பாசுரங்கள், வாசிக்கப்படும் இசைக்கருவிகள் அவை தவிர்ந்து விசேட விழாக்கள் விரத காலங்களில் பாடப்படும் பாடல் வகைகளும், பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும், அவைதவிர மங்களவாத்தியங்களும் பண்டைக்கால ஆலய வழிபாட்டு முறைகளோடு ஒட்டி காணப்பட்டன. ஆனால் தற்காலத்தில் நவீனமயமாக்கப்பட்ட ஆலய முறைமைகளும், நேரமுகாமைகள், பழமை பேணமுடியாத ஆலய நிர்வாகங்கள், இறையியல், இசையியல் மீதான மக்களின் நாட்டக்குறைவு, சினிமா நாடகங்கள் மீதான அதீத மோகம், திட்டமிட்ட கலாசார மற்றும் மத அழிப்பு, மதமாற்றம் என்பவை தற்காலத்தில் வழிபாடுகளில் இடம்பெறும் இசைக்கூறுகளின் ஆதிக்கத்தைப் படிப்படியாக அழிவடைந்து செல்ல வைக்கின்றன. இவற்றையெல்லாம் மீட்டெடுப்பதானால் அனைவருடைய மனோநிலையும் இசையோடு இறைவனைத் துதிபாடும் தூய்மையான நிலைக்கு மாறுதல் வேண்டும் அவ்வாறில்லாமல் தற்போது இருக்கும் நிலை தொடருமானால் எம்முன்னோர்கள் எமக்களித்த எந்தவொரு மேன்மையான விடயங்களும் எம் பின்வரும் தலைமுறையினருக்குக்

கிடைக்காமலும் அவற்றின் மேன்மை புரியாமலும் போய்விடும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

## உசாத்துணை

சுந்தரம். பி. எம்., (1990), ஆலயவழிபாட்டில் இசை, தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

பொன்விழாமலர். (1970), சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி.

வைத்தியலிங்கம், செ., (1991), தமிழ்ப் பண்பாட்டு வரலாறு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.